TAMIL NADU LEGISLATURE LIBRARY
14 MAR 1988
MADRAS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

198[illegible], மார்ச் 6, வெள்ளிக்கிழமை

மாசி 22, அட்சய—திருவள்ளுவர் ஆண்டு 2018

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில் கொட்பின்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை''.

நட்புக்குச் சிறந்த நிலை எது என்றால், எப்போதும் வேறுபடுதல் இல்லாமல், முடியும்போதெல்லாம் உதவி செய்து தாங்கும் நிலையாகும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் மார்க்கெட்டிங் சங்கம்

*81—(*வினா எண். 10332)* திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் மார்த்தாண்டத்தில் இயங்குகின்ற மார்க்கெட்டிங் சங்கத்தில் உற்பத்தி செய்கின்ற தானியங்கள் சென்னை போன்ற தலைநகரங்களில் விற்பனைக்கு கொண்டு வர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டத்தில் கல்குளம் விளவங்கோடு தாலுக்கா கூட்டுறவு விற்பனைச் சங்கம் இயங்கி வருகின்றது. இச்சங்க விவகார எல்லையில் விளையும் நல்ல மிளகு, கிராம்பு ஆகியவை சென்னையிலும் அன்னாசி பழரச ஆலையில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் கேரளம், கர்நாடகா ஆந்திராவிலும் சென்னையில் பார்க் டவுன் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை மூலம் விற்பனைச் செய்யப்படுகின்றது. இவை தவிர சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, மயிலாடுதுறை ஆகிய இடங்களில் உள்ள கூட்டுறவு பேரங்காடிகள் மூலமும் விற்பனை செய்யப்

[1987 மார்ச் 6

பட்டு வருகிறது. மரச்சீனி மாவு தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு தீப்பெட்டி உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும், கூட்டுறவு அச்சகங்களுக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பொருட்களை மற்ற மாநிலங்களுக்கும் அதாவது, டெல்லி, பம்பாய் போன்ற மாநிலங்களுக்கும் அனுப்பினால் அதிகமான பிசினஸ் கிடைத்து அதிலிருந்து அதிகமான லாபம் ஈட்ட முடியும், ஆகவே, அதுபோல் வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்கிற திட்டம் அரசிடம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநிலங்களில் இப்படிப்பட்ட பண்டங்களுக்கு தேவை இருக்குமானால் அங்கே அனுப்பி வைப்பதில் நமக்கு ஒன்றும் இடர்பாடு இல்லை. ஆக இந்த பண்டங்கள் எல்லாம் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக விற்பனை ஆகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு இந்த மாநிலத்தினுடைய பொருட்கள் வெளியே போகின்றன என்பதில் நமக்கு மகிழ்ச்சி தான். அதுவும் கூட்டுறவு முறையில் வாணிகம் பெருக வேண்டும் என்பது தான் நம்முடைய குறிக்கோள். 1985–86-ம் ஆண்டு மட்டும் விற்பனையானது மொத்தம் தரமான மிளகு 17.6 டன்கள், கிராம்பு 1.5 டன்கள், அன்னாசி பழரசம் 43.5 டன்கள், மரச்சீனி அதாவது மரவள்ளி கிழங்கிலிருந்து எடுக்கப்பட்டது 46 டன்கள் ஆக மொத்தம் 1 8.6 டன்கள் ஆகும். இதன் மூலம் கிடைத்த விற்பனையின் மதிப்பு 15 லட்சத்து 63 ஆயிரம் ரூபாய் ஆகும். இந்த விற்பனை மேலோங்கவேண்டும் என்பது தான். பிற மாநிலங்களுடைய தேவையை கணக்கிட்டு நாம் விற்பனை செய்ய வேண்டியிருக்கிறது.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் வேலை செய்யும் ஊழியர்கள் எத்தனை பேர்? கடந்த ஆண்டு லாபம் எவ்வளவு? இதை மேலும் விஸ்தரிக்கும் எண்ணம் அரசுக்கு உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவு சங்கத்தில் லாப நட்ட கணக்கு தெரியவில்லை. ஆனால் பல்வேறு இடங்களுக்கு தேவைப்படுகின்ற இடங்களுக்கு மட்டும் இந்த விற்பனைப் பொருட்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன. தேவைகள் மிக மிக, இங்கிருந்து உற்பத்தி செய்கின்ற அளவும் மிகுமானால், அதை அனுப்பி வைப்பதற்கு வாய்ப்பு ஏற்படும்.

1987 மார்ச் 6]

திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மார்த்தாண்டத்தில் இயங்கி வருகின்ற கல்குளம் விளவங்கோடு தாலுக்கா கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் உற்பத்தி ஆகின்ற பழரசம் அதாவது கன்னியாகுக் என்ற அந்த பழரசம் அதனுடைய தரம் நம்முடைய தனியார் தயாரிக்கின்ற பழரசத்தை விட தரமாகவும், சிறப்பாகவும், சுவையாகவும் இருப்பதால் தமிழகம் முழுவதும் சென்னை மாநகர் போன்ற மிகப் பெரிய பகுதிகளில் அதை விற்பனை செய்கின்ற அளவுக்கு திட்டத்தை விஸ்தரிக்கும் எண்ணம் ஏதாவது உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் சொல்லியபடி அவை சென்னையிலும் மற்ற மாவட்டங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றன. சென்னை, பார்க்டவுன் மொத்த கூட்டுறவு பண்டக சாலையிலும் விற்பனைசெய்யப்படுகிறது; கேரளம், கர்நாடகம், ஆந்திராவிலும் விற்பனை செய்யப்படுகின்றன. கேரளம், கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, மயிலாடுதுறையில் இருக்கின்ற பேரங்காடிகளில் விற்பனை செய்யப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல் தரம் மற்றவை உயர்ந்திருந்தால் மக்களும் விரும்பி வாங்குவார்கள். தேவை அதிகப்படும்போது, உற்பத்தியை அதிகப்படுத்த வாய்ப்பு ஏற்படும்.

மதுரை வடக்கு தாலுக்காவில் வரி வஜா

82—(*வினா எண். 10840)—திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை வடக்கு தாலுக்கா வரிச்சியூர், பறையங்குளம், வெள்ளாங்குளம் ஆகிய கிராமங்களில் வரி வஜா செய்யக்கோரி அந்தப் பகுதி விவசாயிகளிடமிருந்து கோரிக்கை ஏதும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கோரிக்கை ஏதும் வரவில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.